

சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம்

(பீஜீஜஜஎம்)

கொழும்புப் பல்கலைக்கழகம்

2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையும்
கணக்குகளும்

உள்ளடக்கம்

பணிப்பாளரின் செய்தி
1. நிறுவகம் 1
1.1 சுருக்கமான அறிமுகம்..... 1
1.2 நிறுவகத்தின் பணிப்பாளர் 3
1.3 முகாமைத்துவச் சபை..... 3
1.4 நிதிக் குழு 4
1.5 கல்விசார் சபைகள்..... 4
1.5.1 கற்கைச் சபை..... 5
1.5.2 விசேடித்த துறைச் சபைகள் 5
2. 2019 ஆம் ஆண்டில் கல்வி நடவடிக்கைகள்..... 9
2.1ஆயுர்வேத முதுகலைமாணி..... 9
2.1.1. அங்கீகரிகப்பட்ட அகவிதி 9
2.1.2 புத்தாக்க நுழைவு நடவடிக்கைகள் 10
2.2 சித்த மருத்துவ முதுகலைமாணி 10
2.2.1. அங்கீகரிகப்பட்ட அகவிதி 10
2.3 யூனானி முதுகலைமாணி..... 10
2.3.1 அங்கீகரிகப்பட்ட அகவிதி 10
3. நிருவாகப் பிரிவுகள்..... 10
3.1 நிருவாகப் பிரிவு 11
3.2 நிதிப் பிரிவு 12
4. மனிதவளத் தரவுகள்..... 13
4.1 அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் தற்போதைய பணியாளர்கள்..... 13
4.2 நிரந்தரமான ஊழியர்கள்..... 15
4.3 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள்..... 15
5. 2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்..... 16
6. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை..... 46
7. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில் .54
8. கணக்காய்வுக் குழுவின் அவதானிப்பு 58
9. நிலைபேறான அபிவிருத்திக்கான முன்மொழிவு.....60

பணிப்பாளரின் செய்தி



அலோபதி மருத்துவம் நாட்டிற்கு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே இலங்கைக்கு மருத்துவப் பராமரிப்பு வரலாறு உள்ளது. இலங்கையில் உள்ள மிஹிந்தலையில் உலகின் பழங்கால மருத்துவமனைகளில் ஒன்று இருந்தது என்பதை தொல்பொருள் சான்றுகள் நிரூபிக்கின்றன. இந்தப் பின்னணியில், 2019 ஆம் ஆண்டிற்கான சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம்.

2017 ஆம் ஆண்டில் கட்டளைசட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட போதிலும், 2019 ஆம் ஆண்டை சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம் பிறந்த ஆண்டாகக் கருதலாம். முதல் பணிப்பாளர் மற்றும் முகாமைத்துவச் சபையின் நியமனம் 2019 பெப்ரவரி மாதம் நடைபெற்றது, அதன்பின்னர் மற்ற நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன . இந்த நடவடிக்கைகளில் சில கற்கைச் சபைகள், விசேடித்த துறைச் சபைகள், நிதிக் குழு நியமனம் மற்றும் ஒரு சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மற்றும் ஒரு சிரேஷ்ட உதவிப் பொருளாளர் உள்ளிட்ட பிற பணியாளர் பிரிவுகளை ஆட்சேர்ப்பு செய்தமை ஆகியன அடங்கும்.

பட்டப்பின் படிப்பு பட்டதாரிகளின் மருத்துவ பயிற்சிக்கு வழிவகுக்குமுகமாக ஆயுர்வேத மருத்துவமனைகள் மற்றும் அதன் பணியாளர்களை நிறுவகத்தின் கற்பித்தல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்த சுகாதார அமைச்சு ஒப்புதல் அளித்தது. மருத்துவ பட்டப்பின் படிப்பு ஆய்வுத் திட்டங்களை நடத்துவதற்கு வசதியாக சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவக வளாகத்திலும் 5 வது மாடியிலும் பொரள்ளை

ஆயுர்வேத மருத்துவமனையின் பிற பகுதிகளிலும் கட்டமைப்பு மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நிறுவனத்தில் கற்பித்தலை ஆரம்பிப்பதற்கான அத்தியாவசியத் தேவையை பூர்த்தி செய்வதன் மூலம் சனெட் சபையினால் அகவிதிகள் அங்கீகரிக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வுகள் பற்றிய மேலதிக விவரங்களை இந்த அறிக்கையில் காணலாம்.

இந்த ஆண்டில், மருத்துவப் பட்டப்பின் படிப்புப் பயிற்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிறுவனத்தினால் முடியுமாகியது. நிறுவனத்தின் சீரான செயல்பாட்டிற்காக, மீதமுள்ள பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் ஏனைய தேவையான பொருட்களைக் கொள்வனவுசெய்தல் போன்ற மேலதிக மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நிறுவகமானது விரைவில் ஒரு புதிய வடிவத்துடன் நாட்டில் சிறந்து விளங்கி, சிறப்பு சுதேச மருத்துவ சேவைகளை புதுப்பிக்க முடியும் என்று நம்புகின்றோம்.

பேராசிரியர் வசந்த குணதுங்க
பதில் பணிப்பாளர்

1. நிறுவகம்

1.1 சுருக்கமான அறிமுகம்

சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது (PGIIM) கொழும்பு பல்கலைக்கழகத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு கல்வி நிறுவனமாகும், இது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2017 டிசம்பர் 8 ஆம் திகதிய பிஜிஐஐஎம்(PGIIM) கட்டளைசட்ட இல. 2048/46 இன் கீழ் நிறுவப்பட்ட நிறுவகங்களில் ஒன்றாகும். சேவைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றிற்கான மனிதவளத் தேவைகளை பூர்த்தி செய்வதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. சுகாதாரக் குறிப்புக்களின் பிரகாரம், சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு ஆயுர்வேத, யூனானி மற்றும் சித்த மருத்துவத் துறைகளில் சிறப்புத் தேர்ச்சி வாய்ந்த அவசியமான நிபுணர்கள் அனைவரையும் மற்றும் உயர் கல்வி அமைச்சின் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யூனானி ஆகிய துறை நிறுவனங்களுக்கான கல்வியாளர்களின் கல்வியாளர்களையும் வழங்குவது சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் பொறுப்பாகும். அதன்படி, நாட்டின் மனிதவலுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பயிற்சித் திட்டங்களைஆரம்பிப்பதற்கு சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது (PGIIM) பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

2019 பெப்ரவரி 25 ஆம் திகதியன்று முகாமைத்துவ சபையின் முதல் கூட்டத்தை நடத்திய பின்னர் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) செயல்பாட்டு நடவடிக்கைகள் 2019 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டன. சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது (PGIIM) சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பொரள்ளையிலுள்ள ஆயுர்வேத போதனா மருத்துவமனையின் தற்காலிக கட்டிடத்தில், சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்திற்கு (PGIIM) ஒரு நிரந்தர கட்டிடம் கிடைக்கும் வரையிலானதொரு தற்காலிக ஏற்பாடாக நிறுவப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் ஆயுர்வேதம், சித்த ம0ருத்துவம் மற்றும் யூனானி ஆகிய துறைகளில் மருத்துவப் பட்டப்பின் படிப்புகளுக்கு கற்கைச் சபைகள், முகாமைத்துவ சபை மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் செனட் சபை ஆகியவற்றிலிருந்து தேவையான ஒப்புதல்களைப் பெற நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், கட்டடங்களை மாற்றியமைத்தல் மற்றும் புதுப்பித்தல் மற்றும் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்திற்கு (PGIIM) இயந்திரங்களை வாங்குதல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மனிதவளத்தை வலுப்படுத்துவதற்காக, பணிப்பாளர் மற்றும் ஒரு சிரேஷ்ட உதவிப் பொருளாளர் முறையே ஒப்பந்த அடிப்படையில் மற்றும் நிரந்தர அடிப்படையில் பல்கலைக்கழக மானிய ஆணக்குழு மற்றும் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம் (PGIIM) மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றால் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மூன்று முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் இரண்டு பணி உதவியாளர்களை பணி அடிப்படையில் நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1.2 நிறுவகத்தின் பணிப்பாளர்

சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) பிரதான நிறைவேற்று அதிகாரி அதன் பணிப்பாளராவார்.

2019 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) பணிப்பாளர்களாக பேராசிரியர் ஜயந்த ஜயவர்தன (2019 பெப்ரவரி 11 ஆம் திகதி முதல் 2019 நவம்பர் 22 ஆம் திகதி வரை) மற்றும் வைத்தியர் சேனக பிலபிடிய (2019 டிசம்பர் 12 ஆம் திகதி முதல் 2019 சனவரி 22 ஆம் திகதி வரை) ஆகியோர் கடமையாற்றினர்.

1.3 முகாமைத்துவச் சபை

முகாமைத்துவச் சபை (BoM) என்பது பட்டப்பின் படிப்பு முகாமைத்துவ நிறுவகத்தின் (PGIM) முதன்மை நிர்வாக மற்றும் கல்வி அமைப்பாகும், அதன் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் நடைபெறும். முகாமைத்துவச் சபையின் முதலாவது கூட்டமானது 2019 பெப்ரவரி 25 ஆம் திகதி நடைபெற்றதுடன் அதே ஆண்டில் முகாமைத்துவச் சபையின் ஒன்பது (09) வழக்கமான கூட்டங்களும் ஒரு சிறப்புக் கூட்டமும் நடத்தப்பட்டன.

மீளாய்வாண்டில் முகாமைத்துவச் சபையானது (BoM) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

பேராசிரியர் ஜயந்த ஜயவர்தன	- பணிப்பாளர்
வைத்தியர் சேனக பிலபிடிய	பதில் பணிப்பாளர்(2019 டிசம்பர் 12 ஆம் திகதி முதல்
திருமதி/செல்வி நிசாந்தி ஜயசிங்க	- மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) ஆயுர்வேதப் பிரிவு, சுகாதார அமைச்சு
திரு கே.டீ. குமாரதுங்க	- ஆயுர்வேத ஆணையாளர்
பேராசிரியர் (திருமதி) பீ.ஏ. பரணகம	- பணிப்பாளர், சுதேச மருத்துவ நிறுவகம்
வைத்தியர் வீ. செல்வநாதன் (சித்த மருத்துவம்)	- விசேட தர வைத்தியர்
பேராசிரியர் ஜயந்த வெலிகிந்த	- பமாஆ நியமத்தர்
திரு. டீ. தர்மராஜா	- பமாஆ நியமத்தர்
திரு. அனில் ராஜகருணா	- பமாஆ நியமத்தர்
திரு. ஹேமால் கஸ்தூரிஆரச்சி	- மேலதிக பணிப்பாளர் நாயகம், பொது முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு
வைத்தியர் விவயன் சத்தியசீலன்	- தலைவர், சித்த மருத்துவப் பிரிவு, ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்
வைத்தியர் டீ. வீரரத்ன	- விசேட தர வைத்தியர், (ஆயுர்வேதம்)
வைத்தியர் (திருமதி) விஜிதா பகீரதன்	- தலைவர், சித்த மருத்துவப் பிரிவு, திருகோணமலை வளாகம்

வைத்தியர் (திருமதி) ஜே.சீ.கே.டீ. குமரசேகர	- பணிப்பாளர் /பண்டாரநாயக்க ஞாபகர்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகம் (BMARI)
திரு.மெடிஹஹேவ	- கொழும்புப் பல்கலைக்கழக பேரவை நியமத்தர்
திருமதி டப்ளியூ என் நிமாலி டீ சில்வா	- பணிப்பாளர் (அபிவிருத்தி), உயர்கல்வி அமைச்சு
பேராசிரியர் குணபால அமரசிங்க	- பமாஆ நியமத்தர்

1.4 நிதிக் குழு

சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) நிதிக் குழுவின் முதல் கூட்டம் 2019 ஜூன் 03 ஆம் திகதியன்று நடைபெற்றது, நிதிக் குழுவின் மூன்று (03) கூட்டங்கள் 2019 இல் நடைபெற்றது.

மீளாய்வாய்டில் நிதிக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

பேராசிரியர் ஜயந்த ஜயவர்தன	- பணிப்பாளர்
பேராசிரியர் (திருமதி) பீ.ஏ. பரணகம	- பணிப்பாளர், சுதேச மருத்துவ நிறுவகம்
திரு. டீ. தர்மராஜா	- பமாஆ நியமத்தர்
திரு. ஹேமால் கஸ்தூரிஆரச்சி	- மேலதிக பணிப்பாளர் நாயகம்/ பொது முயற்சிகள் திணைக்களம்

1.5 கல்விசார் சபைகள்

கல்விசார் விiயங்கள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான முடிவுகள் முகாமைத்துவ சபை (BOS) மற்றும் செனட்டின் ஒப்புதலின் கீழ் கற்கைச் சபைகள் (BOS) மற்றும் விசேடித்த துறைச் சபை (SpB) ஆகியவற்றால் எடுக்கப்படுகின்றன. அனைத்து கற்கைச் சபைகள் மற்றும் விசேடித்த துறைச் சபை கூட்டங்களும் மாதத்திற்கு ஒரு முறை நடைபெறும்.

1.5.1 கற்கைச் சபை

ஆயுர்வேத மருத்துவம், யூனானி மற்றும் சித்த மருத்துவம் ஆகிய ஆய்வுக் குழுக்களுக்கு உறுப்பினர்ளின் நியமனமானது கட்டளைச் சட்டப்படி பெப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. அனைத்து கற்கைச் சபையின் 1 வது கூட்டம் 2019 மார்ச் மாதம் நடைபெற்றது.

1.5.1.1 கற்கைச் சபையின் பட்டியல்

ஆயுர்வேத மருத்துவ கற்கைச் சபை
சித்த மருத்துவ கற்கைச் சபை
யூனானி மருத்துவ கற்கைச் சபை

1.5.1.2 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற கற்கைச் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை

சபையின் பெயர்	நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை
ஆயுர்வேத மருத்துவம்	12
சித்த மருத்துவம்	4
யூனானி மருத்துவம்	8

1.5.1.2 கற்கைச் சபையின் தவிசாளர்களும் செயலாளர்களும் - 2019

கற்கை சபை	தவிசாளர்	செயலாளர்
ஆயுர்வேத மருத்துவம்	வைத்தியர் எஸ். எம். எஸ். சமரகோன்	வைத்தியர் டப்ளியூ. ஜே. விக்கிரமாரச்சி
சித்த மருத்துவம்	வைத்தியர் ஏ. சிறீதரன்	வைத்தியர் எஸ். உஷாகாந்தன்
யூனானி மருத்துவம்	பேராசிரியர் பீ. எம். நஜீப்	வைத்தியர் ஏ. டப்ளியூ. எஸ். பௌஸியா

1.5.2 விசேடித்த துறைச் சபைகள்

ஆயுர்வேத மருத்துவத்தின் 06 விசேடித்த துறைச் சபைகள் (காய சிகிச்சை, சல்லிய தந்திரம், ஸ்த்ரீரோக பிரசூதிதந்திர, கௌமாரபிரித்ய, திரவ்யகுண விஞ்ஞான மற்றும் ஸ்வஸ்தவ்ரித்த) நிறுவுதலானது 2019 மார்ச் / ஏப்ரல் மாதங்களில் நடைபெற்றதுடன் ஆயுர்வேத மருத்துவத்தின் பைசஜ்ய கல்பனா மற்றும் ரசசாஷ்திரவில் உள்ள புதிய விசேடித்த துறைச் சபை யூன் மாதத்தில் நிறுவப்பட்டது. ஆயுர்வேத மருத்துவத்தில் ஷாலக்யாவில் புதிய விசேடித்த துறைச் சபை ஒக்டோபரில் நிறுவப்பட்டது.

சித்த மருத்துவத்தின் இரண்டு (02) விசேடித்த துறைச் சபைகள் (மருத்துவம் மற்றும் குணபதம்) 2019 மார்ச் / ஏப்ரல் மாதங்களில் நிறுவப்பட்டன.

யூனானி விசேடித்த துறைச் சபைகளை (முஅல்லிஜாத்) நிறுவுவது 2019 மார்ச் / ஏப்ரலில் நடந்தது.

ஆயுர்வேத மருத்துவம்
கௌமாரபிரித்ய விசேடித்த துறைச் சபை
காய சிகிச்சை விசேடித்த துறைச் சபை
பிரசூதிதந்திர விசேடித்த துறைச் சபை
சல்லியதந்திர விசேடித்த துறைச் சபை
ஸ்வஸ்தவ்ரித்த விசேடித்த துறைச் சபை
பைசஜ்ய கல்பனா மற்றும் ரசசாஷ்திர விசேடித்த துறைச் சபை
சாலக்ய விசேடித்த துறைச் சபை

சித்த மருத்துவம்
குணபதத்தில் விசேடித்த துறைச் சபை
மருத்துவத்தில் விசேடித்த துறைச் சபை

யூனானி மருத்துவம்
முஅல்லிஜாத் விசேடித்த துறைச் சபை

1.5.2.1 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற விசேடித்த துறைச் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை

சபையின் பெயர்	நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை
ஆயுர்வேத மருத்துவம்	
சல்லிய	8
காய சிகித்சக	7
பிரசூதிதந்திர	7
ஸ்வஸ்தவ்ரித்த	7
திரவ குண விஞ்ஞானம்	1
சிறுவர் நோயியல்	7
பைசஜ்ய கல்பனா	3
சாலக்ய	2
சித்த மருத்துவம்	
மருந்தியல்	4
மருத்துவவியல்	3
குணபதம்	1
மருத்துவம்	1
யூனானி மருத்துவம்	
மருத்துவம்	1
முஅல்லிஜாத்	3
மருந்தியல்	6

1.5.1.2 விசேடித்த துறைச் சபையின் தவிசாளர்களும் செயலாளர்களும் - 2019

விசேடித்த துறைச் சபை	தவிசாளர்	செயலாளர்
ஆயுர்வேத மருத்துவம்		
சல்லிய	வைத்தியர் எல். பீ. ஏ. கருணாதிலக	வைத்தியர் பீ. எம். எஸ். அமரஜீவ
காய சிகித்சக	வைத்தியர் எஸ். எம். எஸ். சமரகோன்	வைத்தியர் (திருமதி) கே. ஜீ.சீ. திஸாநாயக
பிரசூதிதந்திர	வைத்தியர் (திருமதி) வை. ஏ. யூ. டீ. கருணாரத்ன	வைத்தியர் (திருமதி) கே. பீ. கே. ஆர். கருணாகொட
ஸ்வஸ்தவ்ரித்த	வைத்தியர் (திருமதி) கே. சீ. பெரேரா	வைத்தியர் (திருமதி) டப்ளியூ. எம். எஸ். எஸ். கே. குலதுங்க
திரவ குண விஞ்ஞானம்	வைத்தியர் (திருமதி) எஸ். டீ. ஹபுஆரச்சி	
சிறுவர் நோயியல்	வைத்தியர் ஐ. ஏ. எம். லீனா	வைத்தியர் ஓ.டீ.எம்.ஆர்.கே. எஸ். கலவான
பைசஜ்ய கல்பனா	வைத்தியர் எஸ். எம். கே. ஹெரபாதெனிய	
சாலக்ய	வைத்தியர் கே. பீ. பீ. பீரிஸ்	வைத்தியர் பீ. எம். எஸ். அமரஜீவ
சித்த மருத்துவம்		
குணபதம்	வைத்தியர் என். வர்ணகுலேந்திரன்	வைத்தியர் என். நித்திய குமார்
மருத்துவம்	வைத்தியர் டீ. குமுத்ரஞ்சன்	வைத்தியர் பீ. உதயனன்
யூனானி மருத்துவம்	பேராசிரியர் பீ. எம். நஜீப்	வைத்தியர் ஏ. டப்ளியூ. எஸ். பௌஸியா
முஅல்லிஜாத்	வைத்தியர் எம். சீ. எம். மஹீஸ்	வைத்தியர் எம். எச். எம். ஹபீல்

2. 2019 ஆம் ஆண்டில் கல்வி நடவடிக்கைகள்

ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யூனானி மருத்துவத்தில் பட்டப்பின் படிப்புத் திட்டங்களுக்கான அகவிதிகளைத் தயாரித்தல், மீளாய்வாளர்களுக்கு அனுப்புதல் மற்றும் ஒப்புதல்களுக்கு சமர்ப்பித்தல் ஆகியன 2020 ஆம் ஆண்டு முதல் கல்வித் திட்டங்களைத் தொடங்குவதற்காக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. இது பணிப்பாளர், கற்கைச் சபைகள் மற்றும் விசேடித்த துறைச் சபைகளினது அனைத்துத் தவிசாளர்களின் கடின உழைப்பால் பூர்த்திசெய்யப்பட்டது . 2019 ஆம் ஆண்டில் உரிய அதிகாரசபைகளால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைகளின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

2.1 ஆயுர்வேத முதுகலைமாணி

2.1.1. அங்கீகரிகப்பட்ட அகவிதி

காயசிகித்சா ஆயுர்வேத முதுகலைமாணிப் பாடநெறியில் புதிய அகவிதி மற்றும் சபை சான்றிதழ், கௌமாரபிரித்ய ஆயுர்வேத முதுகலைமாணி மற்றும் சபை சான்றிதழ், சல்ய தந்திர ஆயுர்வேத முதுகலைமாணி மற்றும் சபை சான்றிதழ், ஸ்திரீரோக பிரசூதிதந்திர ஆயுர்வேத முதுகலைமாணி மற்றும் சபை சான்றிதழ், ஸ்வஸ்தவ்ரித்த ஆயுர்வேத முதுகலைமாணி மற்றும் சபை சான்றிதழ் யூன், யூலை மாதங்களில் பெறப்பட்டு செனட்டில் சமர்ப்பிக்கப்பட்டு நவம்பர் / டிசம்பர் மாதங்களில் செனட்டால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

1) மருத்துவ முதுகலைமாணி மற்றும் சபைச் சான்றிதழானது துணை சட்டங்கள், பொது விதிமுறைகள், பரீட்சைகளை நடத்துவதற்கான வழிகாட்டுதல்கள் ஆகஸ்ட் / செப்டம்பர் மாதங்களில் முகாமைத்துவச் சபையால் ஒப்புதல் அளிக்கப்பட்டு செனட்டில் சமர்ப்பிக்கப்பட்டு அக்டோபர் / நவம்பர் மாதங்களில் செனட்டால் அங்கீகரிக்கப்பட்டன.

2) யூலை / ஆகஸ்ட் மாதங்களில் பல்கலைக்கழக செனட்டால் அங்கீகரிக்கப்பட்ட பத்து மருத்துவ முதுகலைமாணி மற்றும் சபைச் சான்றிதழ் கற்கைத் திட்டங்களுக்கு தேவையான பயிற்சி நிலையங்கள்.

2.1.2 புத்தாக்க நுழைவு நடவடிக்கைகள்

பயிற்சியாளர்களை ஒதுக்க தேவையான பயிற்சி நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தேவைப்படும் போது சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின்)PGIIM(முதுகலைமாணிப் பயிற்சி நடவடிக்கைகளுக்கு அமைச்சின் நிபுணர்கள், பிற பணியாளர்கள் மற்றும் ஆயுர்வேத மருத்துவமனைகளை பயன்படுத்த சுகாதார அமைச்சின் செயலாளரிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் மருத்துவ முதுகலைமாணிக் கல்வி நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக, துணைச் சட்டங்கள், பொது ஒழுங்குவிதிகள், பரீட்சைகளை நடத்துவதற்கான வழிகாட்டுதல்கள் ஆகியவற்றிற்கு முகாமைத்துவச் சபை மற்றும் செனட்டின் ஒப்புதல் பெறப்பட்டது.

2.2 சித்த மருத்துவ முதுகலைமாணி

2.2.1. அங்கீகரிகப்பட்ட அகவிதி

சித்த குணபத மருத்துவ முதுகலைமாணியின் புதிய அகவிதிகள் மற்றும் சபைச் சான்றிதழ், சித்த மருத்துவ முதுகலைமாணி மற்றும் சபைச் சான்றிதழ் ஆகியன செப்டம்பர் மாதம் முகாமைத்துவச் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு செனட்டில் சமர்ப்பிக்கப்பட்டு டிசம்பர் மாதத்தில் செனட்டில் ஒப்புதல் பெறப்பட்டது.

2.3 யூனானி மருத்துவ முதுகலைமாணி

2.3.1 அங்கீகரிகப்பட்ட அகவிதி

முஅல்லிஜாத் யூனானி மருத்துவ முதுகலைமாணியின் புதிய அகவிதிகள் மற்றும் சபைச் சான்றிதழ், சித்தா மருத்துவ முதுகலைமாணி மற்றும் சபைச் சான்றிதழ் ஆகியன செப்டம்பர் மாதம் முகாமைத்துவச் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு செனட்டில் சமர்ப்பிக்கப்பட்டு டிசம்பர் மாதத்தில் செனட்டில் ஒப்புதல் பெறப்பட்டது.

3. நிருவாகப் பிரிவுகள்

சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) நிருவாக நடவடிக்கைகள் முக்கியமாக நிருவாக பிரிவு மற்றும் நிறுவனத்தின் நிதி பிரிவு ஆகியவற்றால் கையாளப்படுகின்றன.

3.1 நிருவாக பிரிவு

சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) நிருவாக பிரிவு அனைத்து பொது நிருவாக பணிகளையும் கல்வி நடவடிக்கைகளை எளிதாக்குவது தொடர்பான நடவடிக்கைகளையும் நடத்துகிறது. முகாமைத்துவச் மற்றும் பிற கூட்டங்களை நடத்துவதற்கு நிருவாக ஆதரவை வழங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் செனட் மற்றும் கவுன்சில் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கான ஆவணங்களை அனுப்புதல், கல்வித் திட்டங்கள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் மாணவர் தேவைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கையாளுதல் ஆகியன மீளாய்வாண்டில் நிருவாக பிரிவு மேற்கொண்ட கல்வி தொடர்பான முக்கிய நடவடிக்கைகளாகும்.

மேலும், சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்திற்குப் (PGIIM) பணியாளர்களை நியமிப்பதன் மூலமும் தனிப்பட்ட கோப்புகளை கையாளுவதன் மூலமும், பழுதுபார்ப்பு பணிகள், கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களை பராமரித்தல், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பொது சேவைகளை வழங்குதல், சேவைகளை கொள்முதல் செய்தல் மற்றும் தகவல் தொடர்பு வசதிகளை வழங்குதல் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல் நிருவாக பிரிவின் நிருவாக நடவடிக்கைகளாகும். 2019 ஆம் ஆண்டில், கொழும்பு பல்கலைக்கழகத்தால் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட உதவிப் பதிவாளர் இப்பிரிவிற்குத் தலைமைதாங்கியதுடன் இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் ஒரு பணி உதவியாளர் ஆகியவை பிரிவின் செயல்பாடுகளை நிறைவேற்ற உதவினர்.

3.2 நிதிப் பிரிவு

சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) நிதிப் பிரிவானது நிதி நிருவாகம் மற்றும் பொருட்களை கொள்முதல் செய்வது, வருடாந்த, காலாண்டு மற்றும் மாதாந்த வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்தல், நிதி விஷயங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிக்கைகளை அனுப்புதல், நிறுவனம் பெறும் அனைத்து சேவைகளுக்கும் பணம்

செலுத்துதல், சில்லறைக் காசினைக் கையாளுதல், காசோலைகளை வழங்குதல், சம்பளம் செலுத்துதல் ஆகியன சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) நிதி பிரிவினால் கையாளப்படும் முக்கிய பகுதிகளாகும்.

மேலும், அனைத்து மீண்டுவரும் மற்றும் மூலதன பொருட்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பலவற்றை சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்திற்குக் (PGIIM) கொள்முதல் செய்வது சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) நிதிப் பிரிவால் கையாளப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட உதவிப் பொருளாளர் மற்றும் ஒரு முகாமைத்துவ உதவியாளர் மற்றும் ஒரு பணி உதவியாளர் ஆகியன பிரிவின் செயல்பாடுகளை நிறைவேற்ற உதவியது.

4. மனிதவளத் தரவுகள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது 2019 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம் (PGIIM) எதிர்கொண்ட முக்கிய சவால்களில் ஒன்றாகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 876 மூலம் மற்றும் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் பணியாளர்களை நியமிக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும் சனாதிபதி தேர்தல் காலத்தில் அரசாங்கம் வழங்கிய சுற்றறிக்கைகள் மற்றும் 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தினால் (PGIIM) தனது ஆளணித் தேவை வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை. சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) கல்வி மற்றும் நிருவாக நடவடிக்கைகள் இரண்டிலும் பணியாளர்கள் தேவைப்படுவது நன்கு செயல்படுவதற்கான ஒரு பெரிய சவாலாக மாறியுள்ளது.

4.1 அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் தற்போதைய பணியாளர்கள்

சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கை 16 ஆவதுடன் 2019.12.31 இல் ஆளணியின் விவரங்கள் பின்வருமாறு:

பதவி	சேவை	தரம்	சம்பளக் குறியீடு	சேவை மட்டம்	அங்கீகரிக்கப் பட்ட பதவியணி	தற்போதைய பதவியணி
பணிப்பாளர்	கல்விசார்		U-AC 5	சிரேஷ்ட	1	*1
உதவி நூலகர்	கல்விசார்		U-AC 3	சிரேஷ்ட	1	0

சிரேஷ்ட உதவி பதிவாளர்	யூஏ- எஃப் எஸ்	II/I	U-EX 2	சிரேஷ்ட	1	1
சிரேஷ்ட உதவிப் பொருளாளர்	யூஏ என்ட் எஃப் எஸ்	II/I	U-EX 2	சிரேஷ்ட	1	1
தொழில்நுட்ப அதிகாரி	யூடீஎஸ்	III/II/I	U-MT 1	இரண்டாம் நிலை	1	0
முகாமைத்துவ உதவியாளர்	யூஎம்ஏஎஸ்	III/II/I	U - MN 1	இரண்டாம் நிலை	5	**2
முகாமைத்துவ உதவியாளர் (புத்தக வைத்தல்)	யூடீஎஸ்	III/II/I	U - MN 1	இரண்டாம் நிலை	1	0
சாரதி	யூடிஎஸ்	III/II/I/Spl	U - PL 3	ஆரம்ப நிலை	3	0
பணி உதவியாளர்	யூடப்ளியூஏஎஸ்	III/II/I/Spl	U - PL 1	ஆரம்ப நிலை	2	**1
மொத்தம்					**16**	**6**

***Acting Basis**
****Assignment Basis**

4.2 நிரந்தர ஊழியர்கள்

பெயர்	பதவி	நியமனத் திகதி
திருமதி/செல்வி சீ.பீ. ஹதரசிங்க	சிரேஷ்ட உதவிப் பொருளாளர்	18.03.2019

4.3 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள்

பெயர்	பதவி	நியமனத் திகதி
திருமதி ஐ. கே.கே. விஜேகோன்	சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/பீஜீஐஐஎம்	20.02.2019
திருமதி சீலலதா	முகாமைத்துவ உதவியாளர்	05.03.2019
திருமதி சுமணா	முகாமைத்துவ உதவியாளர்	15.06.2019
திரு எல். பீ. ஜயசேன	முகாமைத்துவ உதவியாளர்	01.07.2019
திரு. கல்தேரா	பணி உதவியாளர்	21.02.2020
திரு. பத்மசிறி	பணி உதவியாளர்	15.06.2019

5. 2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

நிதி நிலைமைக் கூற்று

2019 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறானது	**குறிப்பு இல**	**2019 ரூபா**
சொத்துக்கள்		
நடைமுறைச் சொத்துக்கள்		
காசு மற்றும் காசையொத்தவைகள்	**3**	11,422,717
பணியாளர் கடன்களும் முற்பணங்களும்	**4**	80,000
சரக்கிருப்புக்கள்/இருப்புக்கள்	**5**	117,133
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		11,619,850
நடைமுறையல்லாச் சொத்துக்கள்		
பணியாளர் கடன்களும் முற்பணங்களும்	**4**	260,000
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (தேறியது)	**6**	5,739,339
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		5,999,339
மொத்த சொத்துக்கள்		**17,619,189**
பொறுப்புக்கள்		
நடைமுறைப் பொறுப்புக்கள்		
அட்டுறுச் செலவுகள்	**7**	2,992,068
செலுத்த வேண்டியவைகள்	**8**	14,277
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		3,006,345
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்		
பணிக்கொடைக்கான ஏற்பாடு	**9**	438,776
மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்		438,776
மொத்தப் பொறுப்புக்கள்		**3,445,121**
மொத்தத் தேறிய சொத்துக்கள்		**14,174,068**
தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை		
செலவளித்த மூலதன மானியம்	**10**	2,718,626
செலவளிக்காத மூலதன மானியம்	**10**	3,142,594
உயர் கல்வி அமைச்சிடமிருந்து மூலதன மானியம்	**10**	8,759,378
திரண்ட மிகை/ (பற்றாக்குறை)	**11**	(446,530)
மொத்தத் தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை		**14,174,068**

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட அரசாங்கத் துறைக் கணக்கீட்டு நியமனங்களுடன் இணங்குவதாகத் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

……. …..

சீ.பீ ஹதரசிங்க டப்ளியூ. என். பீ. எம். என். என். கருணா

சிரேஷ்ட உதவிப் பொருளாளர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்

இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் முகாமைத்துவச் சபையின் உறுப்பினர்களே பொறுப்பாவர்

இந்நிதிக் கூற்றுக்கள் முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாகக் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

……..

பேராசிரியர் எம். ஏ. ஜே. டப்ளியூ. ஜயவர்தன

பணிப்பாளர்

…….. ……

திரு. டீ. தர்மராஜா திரு. டீ. என். ஒஸன்

முகாமைத்துவச் சபை உறுப்பினர் முகாமைத்துவச் சபை உறுப்பினர்

அடைப்புக்களிலுள்ள தொகைகள் கழிப்பனவுகளைக் குறிக்கின்றன. பக்கங்கள் 10 முதல் 23 வரையிலான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாகும்.

- ஆங்கிலப் பதிப்பின் கையெழுத்துக் குறிப்புகள் கரஏ

சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்
நிதிச் செயலாற்றல் கூற்று

2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கானது	**குறிப்பு இல.**	**2019 ரூபா.**
வருமானம்		
திறைசேரியிலிருந்தான மீண்டெழும் மானியம்		9,051,000
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்தான மீண்டெழும் மானியம்		2,000,000
ஏனைய வருமானங்கள்	**12**	21,317
கடன்தீர் நிதி வருமானம்	**13**	594,869
மொத்த வருமானம்		**11,667,186**
செயற்பாட்டுச் செலவுகள்		
பணியாளர் ஊதியங்கள்	**14-A**	6,283,317
போக்குவரத்தும் வாழ்க்கைக் கொடுப்பனவும்	**14-B**	300
வழங்கல்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்	**14-C**	232,702
பராமரிப்புச் செலவுகள்	**14-D**	37,780
ஒப்பந்தச் சேவைகள்	**14-E**	3,733,387
ஏனைய மீண்டெழும் செலவுகள்	**14-F**	1,231,360
தேய்மானச் செலவுகள்	**14-G**	594,870
மொத்தச் செலவுகள்		**12,113,716**
காலப்பகுதிக்கான மிகை/ (குறை)		**(446,530)**

சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்
உரிமையாண்மை/ தேறிய சொத்துக்களிலான மாற்றங்களுக்கான கூற்று
2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது

(ரூபா.)

	திரண்ட நிதி	செலவளித்த மூலதன மானியம்	செலவளிக்காத மூலதன மானியம்	உயர் கல்வி அமைச்சிடமிருந்தான மூலதன மானியம்	**மூலதனம்**
2019 சனவரி 01 ஆம் திகதியன்று மீதி		-	-		-
கடன்தீர் நிதி மானியங்கள்		(238,780)		(356,089)	(594,869)
கிடைத்த மூலதன மானியங்கள்			6,100,000	9,115,467	15,215,467
செலவளித்த மூலதன மானியம்		2,957,406	(2,957,406)		-
முன்னைய ஆண்டு சீராக்கங்கள்		-	-	-	-
காலப்பகுதிக்கான மிகை/ (குறை)	(446,530)				(446,530)
2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி	**(446,530)**	**2,718,626**	**3,142,594**	**8,759,378**	**14,174,068**

சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்
ககாசுப் பாய்ச்சல் கூற்று

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது	**(ரூபா.)** **2019**
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான/ (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள்	
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான மிகை/(குறை)	(446,530)
சீராக்கங்கள்	
காசல்லாத பாய்ச்சல்கள்	
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான தேய்மானம்	594,870
பணிக்கொடைக்கான ஒதுக்கம்	438,776
வட்டி வருமானம்	(9,305)
கடன்தீர் நிதி வருமானம்	(594,869)
செயற்பாடுகளிலிருந்தான மிகை/(குறை)	**(17,059)**
சரக்கிருப்புக்களில் அதிகரிப்பு/(குறைவு)	(117,133)
நடைமுறைச் சொத்துக்களில் (அதிகரிப்பு)/குறைவு	-
நடைமுறைப் பொறுப்புக்களில் (அதிகரிப்பு)/குறைவு	1,703,660
பணிக்கொடைக் கொடுப்பனவு	-
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்	**1,569,469**
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான/ (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள்	
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்தல்கள்	(2,916,056)
பணியாளர்களுக்கான கடன் கொடுப்பனவுகள்	(400,000)

பணியாளர்களிடமிருந்தான கடன் வசூலிப்புக்கள்	60,000
நிதி முகாமைத்துவக் கணக்கு மூலமான வட்டி வருமானம்	9,305
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப் பாய்ச்சல்கள்	**(3,246,751)**
நிதியீட்ட நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்	
மீளாய்வாண்டிற்கான மூலதன மானியம்	13,100,000
நிதியீட்ட நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்	**13,100,000**
காசு மற்றும் காசையொத்தவைகளிலும் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைவு)	11,422,717
வருட ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசையொத்தவைகள்	-
வருட இறுதியிலிருந்த காசு மற்றும் காசையொத்தவைகள்	**11,422,717**
காசு மற்றும் காசையொத்தவைகள் :	
காசு மற்றும் வங்கி மீதிகள் (குறிப்பு 3)	**11,422,717**

சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்
நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் வரவுசெலவுத் திட்ட ஒப்பீட்டு அறிக்கை

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது	**குறிப்பு**	**2019 உண்மையானது ரூபா**	**2019 வரவுசெலவுத் திட்டம் ரூபா**
வருமானம்			
திறைசேரியிலிருந்தான மீண்டெழும் மானியம்		9,051,000	10,000,000
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்தான மீண்டெழும் மானியம்		2,000,000	-
ஏனைய வருமானங்கள்	**12**	21,317	-
கடன்தீர் நிதி வருமானம்	**13**	594,869	-
மொத்த வருமானம்		**11,667,186**	**10,000,000**
செயற்பாட்டுச் செலவுகள்			
பணியாளர் ஊதியங்கள்	**14-A**	6,283,317	5,605,000
போக்குவரத்தும் வாழ்க்கைக் கொடுப்பனவும்	**14-B**	300	10,000
வழங்கல்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்	**14-C**	232,702	210,000
பராமரிப்புச் செலவுகள்	**14-D**	37,780	30,000
ஒப்பந்தச் சேவைகள்	**14-E**	3,733,387	2,630,000
ஏனைய மீண்டெழும் செலவுகள்	**14-F**	1,231,360	1,515,000
தேய்மானம் மற்றும் கடன்தீர் நிதிச் செலவுகள்	**14-G**	594,870	-

மொத்தச் செலவுகள்		**12,113,716**	**10,000,000**
காலப்பகுதிக்கான மிகை/ (குறை)		**(446,530)**	**-**

சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

பொதுவான தகவல்கள்

1.1 சட்ட மற்றும் அமைப்புரீதியான வடிவம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 24 அ உடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 18 ஆம் பிரிவின் கீழ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டின் 2031/38 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தால் சுதேச மருத்துவப் பட்டப்பின் நிறுகமானது (பீஜீஜஐஎம்) நிறுவப்பட்டது. இது கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இது கட்டளைச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள அதன் நடவடிக்கைகளை 2019 பெப்ரவரி மாதம் ஆரம்பித்தது. இதன் அலுவலகம் பொரள்ளை, கொட்டா வீதி, ஆயுர்வேதப் போதனா வைத்தியசாலை, 5 ஆம் மாடியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது.

2019 டிசம்பர் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதி நிலைக் கூற்று, நிதி செயல்திறன் கூற்று, உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பன 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவச் சபைக் கூட்டத்தில் முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டன.

1.2 நிதியாண்டு

நிறுவகத்தின் நிதியாண்டு 2019 சனவரி 01 ஆம் திகதி முதல் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியாகும்.

1.3 பிரதான செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் தன்மை

(அ) நிறுவகம் மற்றும் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையின் பேரில் மாணவர்களை அனுமதித்தல் மற்றும் ஆயுர்வேதம், யூனானி மற்றும் சித்த மருத்துவ முறைகளின் சிறப்புகளில் பட்டப்பின் கற்கைகள், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை வழங்குதல்.

(ஆ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் மற்றும் ஆணைக்குழுவின் இணக்கத்துடன் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யூனானி மருத்துவ முறைகள் அல்லது தொடர்புடைய சிறப்புகளில் வழங்கப்படவுள்ள பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின் சான்றிதழ்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புத் தேர்ச்சிகளை நிர்ணயித்தல்.

(இ) ஆயுர்வேதம், சித்தம் மற்றும் யூனானி மருத்துவ முறைகள் அல்லது தொடர்புடைய சிறப்பம்சங்களில் பல சிறப்புகளில் தேர்ச்சி பெற்ற நபர்களைக் கண்டறிவதற்கான நோக்கத்திற்காக பல்கலைக்கழகத்தின் ஒப்புதலுடன், பட்டப்பின் தேர்வுகளை நடத்துதல் மற்றும் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்துடன் ஆலோசனையுடன் பல்கலைக்கழகம் பரிந்துரைக்கும் பிற நிபந்தனைகளை பூர்த்திசெய்துள்ளவர்கள், பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின் சான்றிதழ்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற கல்வி சிறப்புத் தேர்ச்சிகளை வழங்குவதற்கு தகுதியுடையவர்களைப் பல்கலைக்கழகத்திற்குப் பரிந்துரைத்தல்.

(ஈ) நிறுவகத்துடன் ஒத்த நோக்கங்கள் அல்லது ஓரளவு ஒத்த நோக்கங்களைக் கொண்ட இலங்கையில் அல்லது வெளிநாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்கள் அல்லது நிறுவனங்களுடன்

அல்லது நிறுவகங்களுடன் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அறிஞர்களைப் பரிமாற்றம் செய்வதன் மூலம் ஒத்துழைத்தல்.

1.4 நிலைத்திருத்தல்

நிலைத்திருத்தல் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.5 நிதிக் கூ ற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படை

1.5.1 இணக்கக் கூற்று

இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் தராதரங்களுக்கிணங்க வரலாற்றுக் கிரய முறையின் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களில் நிதி நிலைக் கூற்று, நிதி செயல்திறன் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ஆகியன அடங்கும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1.5.2 அளவீட்டிற்கான அடிப்படை

தொடர்புடைய குறிப்புகளின் கீழ் நியாயமான மதிப்பு தொடர்பாக பொருத்தமான வெளிப்பாடுகள் செய்யப்படுவதைத் தவிர, நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையிலும் வரலாற்றுக் கிரய அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.5.3 ஒப்பீட்டுத் தகவல்

இது சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) முதல் அறிக்கையிடல் காலம் என்பதால் வெளிப்படுத்துவதற்கு எந்த ஒப்பீட்டுத் தொகைகளும் இல்லை.

1.5.4 பொருண்மை மற்றும் திரட்டுதல்

ஒத்த பொருட்களின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன. வேறுபட்ட தன்மை அல்லது செயல்பாட்டின் உருப்படிகள் அவை பொருண்மையுடதாகவிருக்கும் பட்சத்தில் அவை தனித்தனியாக வழங்கப்படுகின்றன.

1.5.5 ஈடுசெய்தல்

SLIPSAS ஆல் தேவைப்பட்டால் அல்லது அனுமதிக்கப்படாவிட்டாலொழிய சொத்து மற்றும் பொறுப்புகள் மற்றும் வருமானம் மற்றும் செலவுகள் ஈடுசெய்யப்படவில்லை.

1.5.6 நிதி நிலை கூற்றுக்களின் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் தேதிக்குப் பிறகு அனைத்து பொருள் நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டு, நிதி அறிக்கைகளில் தேவையான இடங்களில் பொருத்தமான மாற்றங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

1.5.7 செயல்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

இந்த நிதிக் கூற்றுக்கள் "இலங்கை ரூபாயில்" (ரூபா.) தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன, இது நிறுவனத்தின் செயல்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமாகும்.

1.5.8 அண்ணளவாக்கல்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் தராதரங்களால் அனுமதிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படாவிட்டால், நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொகைகள் அருகிலுள்ள ரூபாய்க்கு அண்ணளவாக்கப்பட்டுள்ளன.

1.5.9 முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள்

கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான தீர்ப்புகளில் ஏதேனும் மாற்றங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான தொடர்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

2.1 நடைமுறைச் சொத்துக்கள்

நிதிக் கூற்றுக்களின் திகதியின் பின்னர் ஒரு வருடத்திற்குள் மீட்கப்படும் சொத்துக்கள் நிதி நிலைக் கூற்றுக்களில் வகைப்படுத்தப்பட்ட நடைமுறைச் சொத்துக்களாகும்.

2.1.1 காசு மற்றும் காசையொத்தவைகள்

காசு மற்றும் காசையொத்தவைகளில் கையிலுள்ள காசு, வங்கி நிலுவைகள் மற்றும் குறுகிய கால முதலீடுகள் ஆகியன அடங்கும்.

2.1.2 சரக்கிருப்புக்களும் மற்றும் களஞ்சியப் பொருட்களும்

சரக்கிருப்புக்கள் கிரயம் மற்றும் தேறிய உணரக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் குறைவான தொகையில் குறிப்பிடப்படும். பொதுவாக கிரயம் என்பது முதல் வந்தது முதலில் வெளியேற்றப்படும் அடிப்படையில் மற்றும் சரக்குகளைப் பெறுவதற்கும் அவற்றை அவற்றின் தற்போதைய நிலை மற்றும் இருப்பிடத்திற்குக் கொண்டுவருவதற்கும் செலவையும் சேர்த்துத் தீர்மானிக்கப்படுகின்றது.
நிறுவகத்தின் சரக்கிருப்பில் காகிதாதிகள் மற்றும் பிற நுகர்வுப் பொருட்கள் உள்ளன.

2.2 நடைமுறை அல்லாத சொத்துக்கள்

2.2.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

அலுவலகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள், கணினி மற்றும் கணினி பாகங்கள் மற்றும் பிற சொத்துக்கள் ஆகியன அரசாங்க மானியங்களிலிருந்து பெறப்பட்ட பொருட்களை உள்ளடக்குகின்றன.

கொழும்பு பல்கலைக்கழகம் உயர்கல்வி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ஆரம்ப மானியத்தில் 2018 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம் சார்பாக ரூபா. 2,264,892.50 பெறுமதியான சொத்துக்களைக் கொள்வனவு செய்தது. இந்த சொத்துக்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தால் 2018 ஆம் ஆண்டில் அவர்களின் சொத்துகளாக அவர்களின் நிதி அறிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்டு மூலதனமாக்கப்பட்டன. மேலும், ரூபா. 149,425.53 மற்றும் ரூபா. 112,313.85 கொழும்பு பல்கலைக்கழகத்தால் முறையே 2018 ஆம் ஆண்டு மற்றும் 2019 யூன் 30 ஆம் தேதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான திரட்டிய தேய்மானமான அங்கீகரிக்கப்பட்டன. அதன்படி, ரூபா. 2,003,153.12 பெறுமதியான சொத்துக்கள் 01.07.2019 திகதியிலுள்ளவாறு சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தினால் அவர்களின் தேறிய எழுதப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு மூலதனமாக்கப்பபட்டதுடன் அந்தந்த மானியம் சொத்துக்களின் மீதியுள்ள பயனுள்ள வாழ்க்கையின் போது கடன்தீர்ப்பனவு செய்யப்படுகின்றது.

அ) அங்கீகாரம் மற்றும் அளவீட்டிற்கான அடிப்படை

பொருளுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் அந்த நிறுவனத்திற்கு பாயும் மற்றும் பொருளின் விலையை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியும் எனில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்திலிருந்து திரட்டப்பட்ட தேய்மானம் கழிக்க வரும் தொகையில் பதிவு செய்யப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் என்பது எந்தவொரு தற்செயலான செலவினங்களுடனும் கூடிய கொள்வனவு அல்லது நிர்மாணச் செலவு ஆகும்.

அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் ஆரம்பத்தில் செலவில் கூறப்பட்டு, பின்னர் கிரயத்திலிருந்து திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் சேத இழப்புக்களைக் கழித்து அளவிடப்படுகின்றன. பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவு விரிவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஆ) ஆரம்ப அங்கீகாரம்

சொத்தானது அதன் தன்மையில் அடிப்படையில் மூலதனமாக்கப்படுகின்றது. சொத்தானது தொட்டுரணக்
கூடியதாகவும், ஒரு வருடத்திற்கும் மேலான ஆயுள் மற்றும் குறிப்பிடத்தக்க செலவு இருந்தால்

மூலதனமாக்கப்படுகிறது. சொத்தின் ஆயுள் 5 முதல் 20 ஆண்டுகள் வரையிலான அதன் வகையைப் பொறுத்ததாகும்.

இ) தற்போதுள்ள நிலையான சொத்துக்களுக்கான தொடர்ந்துவரும் செலவுகள்

தொட்டுரணக் கூடிய நிலையான சொத்துக்களுக்கு ஏற்படும் செலவுகள், அது நிகழும் காலகட்டத்தில் நிதி
செயல்திறன் அறிக்கையில் வசூலிக்கப்படுகிறது, இது பின்வரும் அளவுகோல்களில் ஒன்றை பூர்த்தி செய்யாவிட்டால், அது மூலதனமாக்கப்பட்டு தொடர்புடைய அடிப்படையில் தேய்வழிக்கப்படுகின்றது.

- நிலையான சொத்துக்களின் சந்தை மதிப்பு பின்னர் அதிகரித்தல்.
- சொத்து திறன் அதிகரித்தல்.
- வெளியீட்டின் தரத்தில் நிலையான முன்னேற்றம் அல்லது இயக்க செலவைக்
  குறைத்தல்.
- பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பால் உறுதிப்படுத்தப்பட்டதைத் தாண்டி சொத்து வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க நீட்டிப்பு.

ஈ) தேய்மானம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணப் பொருட்களின் பயன்பாட்டிற்குக் கிடைத்த நாளிலிருந்து மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கை குறித்த நேர் கோட்டு முறையில் நிதி செயல்திறன் அறிக்கையில் தேய்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. காணிகள் தேய்மானம் செய்யப்படவில்லை. மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு.

விளக்கம்	**மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம்**
அலுவலகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	10 ஆண்டுகள்
கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்கள்	5 ஆண்டுகள்
தளபாடங்கள் மற்றும் பொருத்திகள்	10 ஆண்டுகள்

பயனுள்ள ஆயட் காலத்தின் அடிப்படையில், கொள்வனவு செய்த திகதி முதல் மற்றும் கையகற்றும் தேதி வரை தேய்மானம் வழங்கப்படுகிறது. கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள் 01.07.2019 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு தேய்மானம் செய்யப்படுகின்றன. ஏனெனில், இந்த சொத்துக்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தால் யூன் 30 வரை தேய்மானமிடப்பட்டன.

2.3. பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

2.3.1 நடைமுறைப் பொறுப்புகள்

நிதி நிலைக் கூற்றுக்களில் தற்போதைய பொறுப்புகள் என வகைப்படுத்தப்பட்ட கடன்கள் நிதி நிலைகள் அறிக்கையின் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவை. நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளும் கணக்கிடப்பட்டுள்ளன.

2.3.2 ஓய்வூதிய நன்மைகளுக்கான கடப்பாடுகள்

பணியாளர் நன்மைகள்

(அ) வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் - பணிக்கொடை

வரையறுக்கப்பட்ட நன்மை திட்டங்கள் ஒரு பணியாளர் ஓய்வூதியத்தில் பெறும் நன்மையின் அளவை மதிப்பிடுகின்றன.
தகுதிவாய்ந்த அனைத்து பணியாளர்களுக்கும் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் தேவைப்படும் பயன் திட்டத்தை பல்கலைக்கழகம் பின்பற்றுகின்றது.

இது பொதுவாக வயது, சேவை ஆண்டுகள் மற்றும் இழப்பீடு போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளைச் சார்ந்ததாகும். இந்த பொறுப்பை பூர்த்தி செய்வதற்காக, அறிக்கையிடல் தேதியின்படி முன்னோக்கி கொண்டு செல்லப்பட்ட ஒரு விதி, உள் மேலாண்மை மதிப்பீட்டின் அடிப்படையில் கணக்கிடப்படும் தொகை. அதன்படி, பல்கலைக்கழக அமைப்பில் 5 ஆண்டு சேவையை பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு பொறுப்பு அறிக்கை திகதியின்படி அங்கீகரிக்கப்படுகிறது. எந்தவொரு கொடுப்பனவுகளின் கால நிகரத்தின் தொடக்கத்தில்

முன்வைக்கப்பட்ட ஏற்பாட்டிற்கும், காலத்தின் முடிவில் முன்னெடுக்கப்பட்ட ஏற்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடு இலாப நட்டக் கூற்றில் கையாளப்படுகிறது.

பணிக்கொடைப் பொறுப்பு வெளிப்புறமாக நிதியளிக்கப்படவில்லை அல்லது உண்மையில் மதிப்பிடப்படவில்லை.

(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது ஒரு வேலைவாய்ப்புக்கு பிந்தைய திட்டமாகும், இதன் கீழ் ஒரு நிறுவனம் ஒரு தனி நிறுவனத்தில் நிலையான பங்களிப்பை செலுத்துகிறது, மேலும் கூடுதல் தொகையை செலுத்த சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடமை இருக்காது. வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் விரிவான வருமான அறிக்கையில் அவை எப்போது வர வேண்டும் என்பதற்கான செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழக சேமலாப நிதி (UPF) மற்றும் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதி

இலங்கை மற்றும் பல்கலைக்கழக சட்டத்தில் அந்தந்த சட்டங்கள் மற்றும் சட்டங்களின்படி பல்கலைக்கழக சேமலாப நிதிக்கு நிறுவகம் மற்றும் பணியாளர்களின் மொத்த சம்பளத்தில் முறையே 15% அல்லது 7% மற்றும் 10% பங்களிப்பு செய்கிறது. மேலும், ஓய்வூதியம் பெறும் ஊழியர்களுக்கு பல்கலைக்கழக ஓய்வூதிய நிதிக்கு 8% இனைப் பங்களிப்பு செய்கிறது.

ஊழியர்களின் நம்பிக்கை நிதி (ETF)

ஒவ்வொரு ஊழியரின் மொத்த சம்பளத்தில் 3% ஊழியர்களின் நம்பிக்கை நிதிக்கு பல்கலைக்கழகம் பங்களிப்புச் செய்கின்றது.

2.3.3 தற்செயலான பொறுப்புகள்

வழக்குகளில் எழும் பொறுப்புகள் தொடர்பாக கணக்குகளில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. 2019 டிசம்பர் 31 நிலவரப்படி மொத்த மதிப்பிடப்பட்ட கடன்கள் நிதிக் நிலைக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.4 உரிமையாண்மை

2.4.1 மூலதன மானியங்கள்

அரசாங்க மானியங்கள் அவற்றின் நியாயமான பெறுமதியில்அங்கீகரிக்கப்படுகின்றன, அங்கு மானியங்கள் பெறப்படும் என்பதற்கான நியாயமான உத்தரவாதம் மற்றும் பாதிக்கும் அனைத்து நிபந்தனைகளும் பின்பற்றப்படும்.

நிலையான சொத்துக்களை வாங்குவதற்கான அரசாங்க மானியங்களும் பிற நிறுவனங்களின் பங்களிப்புகளும் முதன்முதலில் முன்கூட்டியே பெறப்பட்ட மானியங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. மூலதனமாக்கப்பட்ட சொத்துக்களை வாங்குவதற்கான மானியங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது செலவழிக்கப்பட்ட சொத்துக்களை வாங்குவதற்கான வருமானம் அல்லது செலவினங்களுக்காக அவை செலவிடப்படாத மூலதன மானியக் கணக்கில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

2.4.2 மீண்டுவரும் மானியங்கள்

காசு அடிப்படையில் நிதி செயல்திறன் அறிக்கையில் மீண்டுவரும் மானியங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

மானியங்களுக்கான கணக்கீடு

செலவினங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதே காலகட்டத்தில் வருமான அறிக்கையில் வருவாயாக பல்கலைக்கழகத்திற்கு ஏற்படும் செலவுகளுக்கு ஈடுசெய்யும் மானியங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஒரு சொத்தின் விலைக்கு பல்கலைக்கழகத்திற்கு ஈடுசெய்யும் மானியங்கள் வருமான அறிக்கையில் தொடர்புடைய சொத்தின் பயனுள்ள வாழ்க்கை குறித்த முறையான அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் தராதரம் 20 இன் படி, மூலதன மானியங்களை அடையாளம் காணும்போது பல்கலைக்கழகம் வருமான அணுகுமுறை கணக்கியல் எண்ணக்கருவை ஏற்றுக்கொண்டது.2019 ஆம் ஆண்டில் உயர்கல்வி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ஆரம்ப மூலதன மானியம் ரூபா. 7,000,000.00 மற்றும் 2019 ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் படி திறைசேரியிலிருந்து பெறப்பட்ட மூலதன மானியம் ரூபா. 6,100,000.00 இந்த இரண்டு மானியங்களும் 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மூலதன மானியங்களாக தனித்தனியாக அங்கீகரிக்கப்பட்டு அதற்கேற்ப கடன்தீர்ப்பனவு வழங்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக, ரூபா.2,115,466.97 உயர்கல்வி அமைச்சிடமிருந்து மூலதன மானியங்களாக கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2.5 விரிவான வருமானக் கூற்று

2.5.1 வருமான அங்கீகாரம்

வருமானம் நிறுவனத்திற்கு பொருளாதார நன்மைகள் பாயும் சாத்தியக்கூறுகள் இருப்பதோடு, வருவாய் நம்பகத்தன்மையுடன் அளவிடப்படலாம், பணம் செலுத்தும் போது பொருட்படுத்தாமல். வருவாய் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் பின்வரும் குறிப்பிட்ட அங்கீகார அளவுகோல்களும் பூர்த்தி செய்யப்படுகின்றன.

01. வட்டி வருமானம்

பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி வருமானம் அல்லது செலவில் அட்டுறுவாவதால் வட்டி வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

02. பிற வருமானம்

அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட மேற்கண்ட வகைகளின் கீழ் குறிப்பிடப்படாத வேறு ஏதேனும் வருமானம்.

2.5.2 செலவினங்களை அங்கீகரித்தல்

நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான செலவுகள் திரட்டப்பட்ட அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு, அவை நிகழும் காலகட்டத்தில் விரிவான வருமான அறிக்கைக்கு விதிக்கப்படும்.

2.6 காசுப் பாய்ச்சல் கூற்று

SLPSAS 2 க்கு இணங்க மறைமுக முறையைப் பயன்படுத்துவதன் மூலம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது, அங்கு செயற்பாட்டு நடவடிக்கைகள், நிதியீட்ட நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றின் மொத்த காசுப் பெறுவனவுகளும் கொடுப்பனவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2. 7 கடமைகள் மற்றும் எதிர்பாரா நிகழ்வுகள்

அறியப்பட்ட அனைத்து கடன்களின் அளவையும் தீர்மானிப்பதில் அனைத்து தெளிவான அபாயங்களும் கணக்கிடப்படுகின்றன. தொடர்ச்சியான பொறுப்புகள் என்பது சாத்தியமான கடமைகளாகும், அவற்றின் இருப்பு நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது பொருளாதார நன்மைகளை மாற்றுவது சாத்தியமில்லை அல்லது நம்பத்தகுந்த முறையில் அளவிடப்படாத தற்போதைய கடமைகளால் மட்டுமே உறுதிப்படுத்தப்படும். நிதி நிலை அறிக்கையில் தொடர்ச்சியான பொறுப்புகள் அங்கீகரிக்கப்படவில்லை, ஆனால் அவை தொலைதூரத்தில் இல்லாவிட்டால் அவை வெளிப்படுத்தப்படுகின்றன.

2.8 அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு நிகழும் நிகழ்வுகளின் பொருள் பரிசீலிக்கப்பட்டு, தேவையான இடங்களில் பொருத்தமான மாற்றங்கள் நிதி அறிக்கைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன

சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்
நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்
2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது

குறிப்பு 03 **காசு மற்றும் காசையொத்தவைகள்**	**2019** **ரூபா**
இலங்கை வங்கி பொரள்ளை சிறப்புத்தர கிளை கணக்கிலக்கம்: 0084061028 - மீண்டெழும்	1,270,818
இலங்கை வங்கி பொரள்ளை சிறப்புத்தர கிளை கணக்கிலக்கம்: 0084060859 - மூலதனம்	142,594
இலங்கை வங்கி பொரள்ளை சிறப்புத்தர கிளை கணக்கிலக்கம்: 0085283375 - நிதி முகாமைத்துவக் கணக்கு	10,009,305
	11,422,717

குறிப்பு 04 பணியாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும்	2020 இல் வசூலிக்கக் கூடியது	2020 இற்குப் பின்னர் வசூலிக்கக் கூடியது	2019 ரூபா
இடர்க் கடன்	50,000	162,500	212,500
கணினிக் கடன்	6,000	19,500	25,500
போக்குவரத்துக் கடன்	24,000	78,000	102,000
	80,000	**260,000**	**340,000**

குறிப்பு 05 சரக்கிருப்புக்கள் / இருப்பு -	2019 ரூபா
இருப்பு	117,133
	117,133

குறிப்பு 06 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	2019 ரூபா.

விவரம்	2019.01.01 இல் மீதி	சேர்ப்பனவுகள்	கையகற்றல்கள் / சீராக்கங்கள்	2019.12.31 இல் மீதி
அலுவலகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	-	1,970,238	-	1,970,238
கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்கள்	-	1,372,717	-	1,372,717
தளபாடங்களும் பொருத்திகளும்	-	2,991,253	-	2,991,253
மொத்தம்	**-**	**6,334,208**	**-**	**6,334,208**

தேய்மானத்திற்கான ஏற்பாடு

விவரம்	%	2019.01.01 இல் மீதி	ஆண்டிற்கான விதிப்பனவு	கையகற்றல்கள் / சீராக்கங்கள்	2019.12.31 இல் மீதி
அலுவலகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்களிற்கான தேய்மான ஏற்பாடு	10		146,427		146,427
கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்களிற்கான தேய்மான ஏற்பாடு	20		278,424		278,424
தளபாடங்கள் மற்றும் பொருத்திகளுக்கான தேய்மான ஏற்பாடு	10		170,019		170,019
மொத்தம்		**-**	**594,870**	**-**	**594,870**

கீழ் எழுதிய மீதி

விவரம்	2019.01.01 இல் மீதி	சேர்ப்பனவுகள்	கையகற்றல்கள் / சீராக்கங்கள்	2019.12.31 இல் மீதி
அலுவலகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	-	1,823,810	-	1,823,810
கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்கள்	-	1,094,294	-	1,094,294
தளபாடங்களும் பொருத்திகளும்	-	2,821,234	-	2,821,234
மொத்தம்	**-**	**5,739,339**	**-**	**5,739,339**

குறிப்பு 07 **அட்டுறுச் செலவுகள்**	**2019** **ரூபா**
	-
அட்டுறுச் செலவுகள் - மீண்டெழும்	1,689,383
அட்டுறுச் செலவுகள் - மூலதனம்	1,302,685
மொத்தம்	**2,992,068**

குறிப்பு 08 செலுத்த வேண்டியவை	2019 ரூபா
செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை	900
செலுத்த வேண்டிய PAYE வரி	13,377
மொத்தம்	**14,277**

குறிப்பு 09 ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடு	2019 ரூபா
சனவரி 1 ஆம் திகதி மீதி	-
ஆண்டிற்கான மாற்றம்	438,776
	438,776
மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்	-
டிசம்பர் 31 ஆம் திகதி மீதி	**438,776**

குறிப்பு 10 மூலதன மானியங்கள்	2019 ரூபா
செலவளித்த மூலதன மானியங்கள்	2,718,626
செலவளிக்காத மூலதன மானியம்	3,142,594
உயர் கல்வி அமைச்சிடமிருந்தான மூலதன மானியம்	8,759,378
	14,620,597

குறிப்பு 11 திரண்ட மிகைகளும் பற்றாக்குறைகளும்	2019 ரூபா
சனவரி 1 ஆம் திகதி மீதி	-
சீராக்கங்கள் (முன்னைய ஆண்டு)	-
காலப்பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை)	(446,530)
டிசம்பர் 31 ஆம் திகதி மீதி	**(446,530)**

குறிப்பு 12 **ஏனைய வருமனம்**	**2019** **ரூபா**
கடன் மற்றும் முற்பணத்திலிருந்தான வட்டி	12,012
நிதி முகாமைத்துவக் கணக்கு மூலமான வட்டி	9,305
மொத்தம்	**21,317**

குறிப்பு 13 **கடன்தீர் நிதி வருமானம்**	**2019** **ரூபா**
கடன்தீர் நிதி வருமானம் -அரசாங்க மூலதன மானியங்கள் (சொத்துக்கள்)	238,780
கடன்தீர் நிதி வருமானம் - உயர் கல்வி அமைச்சிடமிருந்தான மூலதன மானியங்கள் (சொத்துக்கள்)	356,089
மொத்தம்	**594,869**

மொத்தச் செலவு

குறிப்பு 14 -A **பணியாளர் ஊதியங்கள்**	**2019** **ரூபா**
கல்விசார்	
சம்பளங்களும் கூலிகளும்	1,918,967
மொத்தம்	**1,918,967**
கல்விசாராத	
சம்பளங்களும் கூலிகளும்	3,011,116
பல்கலைக்கழக சேமலாப நிதி	155,237
ஓய்வூதியம்	73,053
ஊழியர் நம்பிக்கை நிதி	27,395
மாதாந்த வேதனக் கொடுப்பனவு	260,515
விடுமுறைக் கொடுப்பனவுகள்	6,127
பணிக்கொடை	438,776
ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள்	202,623
வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள்	73,723
மேலதிகக் கொடுப்பனவுகள் 20%	115,785
மொத்தம்	**4,364,350**
மொத்தம்	**6,283,317**

குறிப்பு 14 -B **போக்குவரத்தும் வாழ்க்கைக் கொடுப்பனவும்**	**2019** **ரூபா**
உள்ளூர்	300
மொத்தம்	**300**

குறிப்பு 14 -C **வழங்கல்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்**	**2019** **ரூபா**
எழுதுகருவிகளும் அலுவலகத் தேவைகளும்	155,814
எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி	60,363
ஏனைய வழங்கல்கள்	16,525
மொத்தம்	**232,702**

குறிப்பு 14 - D	**2019**

பராமரிப்புச் செலவுகள்	**ரூபா**
கட்டடம் மற்றும் கட்டமைப்பு	37,780
மொத்தம்	**37,780**

குறிப்பு 14 - E	**2019**
ஒப்பந்தச் சேவைகள்	**ரூபா**
தொலைத்தொடர்பு	93,582
தபாற் கட்டணங்கள்	4,640
மின்சாரம்	450,000
பாதுகாப்புச் சேவை	414,972
நீர்	200,000
சுத்திகரிப்புச் சேவை	595,148
வாடகைகளும் வாடகைக் கட்டணங்களும்	1,740,629
அச்சிடலும் விளம்பரமும்	234,416
மொத்தம்	**3,733,387**

குறிப்பு 14 - F	**2019**
ஏனைய மீண்டெழும் செலவுகள்	**ரூபா**
விசேட சேவை - பேரவை மற்றும் குழுக்கள்	878,390
விசேட சேவை -தொழில் நிபுணத்துவம் மற்றும் ஏனைய கட்டணங்கள்	340,000
பணியாளர் அபிவிருத்தி மற்றும் பயிற்சி	5,870
வங்கிக் கட்டணங்கள்	7,100
மொத்தம்	**1,231,360**

குறிப்பு 14 -G தேய்மானச் செலவுகள்	2019 ரூபா
அலுவலகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்களிற்கான தேய்மானம்	146,427
கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்களிற்கான தேய்மானம்	170,019
தளபாடங்கள் மற்றும் பொருத்திகளுக்கான தேய்மானம்	278,424
மொத்தம்	**594,870**

சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

2019 டிசம்பர் 31 இல் இருந்தவாறான பரீட்சை மீதி

குறியீடு மற்றும் கணக்கின் பெயர்	வரவு	செலவு
30010 - பணிக்கொடைக்கான ஒதுக்கம்		438,775.65
30100 - அட்டுறுச் செலவுகள் -மூலதனம்		1,302,685.22
30110 - அட்டுறுச் செலவுகள் -மீண்டெழும்		1,689,382.80
30120 - செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை		900.00
30140 - செலுத்த வேண்டிய PAYE வரி		13,377.00
30170 - கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்களிற்கான தேய்மான ஏற்பாடு		146,427.17
30180 - தளபாடங்கள் மற்றும் பொருத்திகளுக்கான		278,423.51
தேய்மான ஏற்பாடு		170,018.86
20050 தளபாடங்கள் மற்றும் பொருத்திகள்	2,991,253.21	
20060 - அலுவலகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	1,970,237.54	
20070 - கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்கள்	1,372,717.44	
20200 - சரக்கிருப்பு	117,132.78	
20210 - இடர்க் கடன்	212,499.97	
20220 - போக்குவரத்துக் கடன்	102,000.00	
20230 - கணினிக் கடன்	25,500.00	
20240 - முற்பணங்கள்	-	
20245 -சில்லறைக் காசு மீள்நிரப்பல்	-	
20250 - இலங்கை வங்கி பொரள்ளை சிறப்புத்தர கிளை கணக்கிலக்கம்: 0084061028 - மீண்டெழும்	1,270,818.33	
20260 - இலங்கை வங்கி பொரள்ளை சிறப்புத்தர கிளை கணக்கிலக்கம்: 0084060859 - மூலதனம்	142,594.00	
20270 - இலங்கை வங்கி பொரள்ளை சிறப்புத்தர கிளை கணக்கிலக்கம்: 0085283375 - நிதி முகாமைத்துவக் கணக்கு	10,009,304.79	
10010 - சம்பளங்களும் கூலிகளும்	1,918,967.24	
10510 - சம்பளங்களும் கூலிகளும்	3,011,116.32	
10520 - பல்கலைக்கழக சேமலாப நிதி	155,237.41	
10530 - ஓய்வூதியம்	73,052.93	
10540 - ஊழியர் நம்பிக்கை நிதி	27,394.82	

10570 - விடுமுறைக் கொடுப்பனவுகள்	6,127.35	
10590 - வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள்	73,722.59	
10620 - பணிக்கொடை	438,775.65	
10680 - ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள்	202,623.11	
10650 - 20% மேலதிகக் கொடுப்பனவுகள்	115,784.64	
10690 -45 % மாதாந்த வேதனக் கொடுப்பனவு	260,515.43	
11010 - உள்ளூர்	300.00	
12010 - எழுதுகருவிகளும் அலுவலகத் தேவைகளும்	155,813.94	
12020 - எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி	60,363.07	
12070 - ஏனையவைகள்	16,525.00	
13030 - கட்டடம் மற்றும் கட்டமைப்பு	37,780.00	
14020 - தொலைத்தொடர்பு	93,581.67	
14030 - தபாற் கட்டணங்கள்	4,640.00	
14040 - மின்சாரம்	450,000.00	
14050 - பாதுகாப்புச் சேவை	414,972.16	
14060 - நீர்	200,000.00	
14070 - சுத்திகரிப்புச் சேவை	595,148.00	
14080 - வாடகைகளும் வாடகைக் கட்டணங்களும்	1,740,629.03	
அச்சிடலும் விளம்பரமும் போன்றன	234,416.00	
15020 - விசேட சேவை - பேரவை மற்றும் குழுக்கள்	878,390.00	
15030 - விசேட சேவை -தொழில் நிபுணத்துவம் மற்றும் ஏனைய கட்டணங்கள்	340,000.00	
15060 - பணியாளர் அபிவிருத்தி(பயிற்சி)	5,870.00	
15170 - வங்கிக் கட்டணங்கள்	7,100.00	
15240 - அலுவலகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்களிற்கான தேய்மானம்	146,427.17	
15250 - கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்களிற்கான தேய்மானம்	278,423.51	
15260 - தளபாடங்கள் மற்றும் பொருத்திகளுக்கான தேய்மானம்	170,018.86	
40100 - திறைசேரியிலிருந்தான மீண்டெழும் மானியம்		9,051,000.00
40110 - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்தான மீண்டெழும் மானியம்		2,000,000.00
40140 - செலவளித்த திறைசேரி மூலமான மானியம்		2,718,625.71
40150 - செலவளிக்காத திறைசேரி மூலமான மானியம்		3,142,594.00
40160 - உயர் கல்வி அமைச்சிடமிருந்தான மூலதன மானியங்கள்		8,759,377.72
40170 - கடன் மற்றும் முற்பணத்திலிருந்தான வட்டி வருமானம்		12,011.99

40180 - நிதி முகாமைத்துவக் கணக்கு மூலமான வட்டி வருமானம்		9,304.79
40190 -கடன்தீர் நிதி வருமானம் - நிலையான சொத்துக்கள்		594,869.54
	30,327,773.96	30,327,773.96

6. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

எனது இல. ஈ டீயூ/பீ/பீஜீஜஎம்/எஃப்/ஏ 2019 ஆகஸ்ட் 31 ஆம் திகதி

பணிப்பாளர்
சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் வாசகத்தின் படியிலான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

–

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவடையும் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவடையூம் ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளடங்கலான முக்கிய கணக்கீட்டு தராதரங்களை உள்ளடங்கிய 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்குரிய நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் எனது கட்டளைக்கமைய கணக்காய்விற்குட்படுத்தப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் கணக்காய்விற்குத் தகைமை பெறும் எனும் அபிப்பிராயத்தைக் கொண்ட பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்களின் பாதிப்பினைத் தவிரஇ நிறுவகத்தில் 2019 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமை மற்றும் அத்தினத்தன்று முடிவடையும் வருடத்தின் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப, உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கிணங்க (இகநி) நான் கணக்காய்வினை மேற்கொண்டுள்ளேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழ், எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வாளரின்; பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விளக்கப்பட்டுள்ளன. எனது கணக்காய்வுக்குத் தகுதி பெறுதல் அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு, பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவையாகவும் பொருத்தமானவையாகவும் உள்ளன என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிருவகிக்கும் தரப்பினரது பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை அரசாங்க கணக்கீட்டுத் தராதரங்களுக்கேற்ப தயாரித்தல் மற்றும் நியாயமானதாகச் சமர்ப்பித்தலும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அளவுரீதியான பிழையான வெளிப்பாடுகளின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தைத் தொடர்ந்தும் நடாத்திச் செல்லும் இயலுமையைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தினது பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது வங்கியை முடிவூறுத்துவதற்கு எண்ணியிருப்பின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாத போது, செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பினும் தவிர, இடையறாது நிலைத்திருத்தல் அடிப்படையில் கணக்குகளை மேற்கொள்ளல் மற்றும் நிறுவனத்தின் இடையறாது நிலைத்திருத்தலுக்குரிய விடயங்களை வெளிப்படுத்துவது முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செய்முறை தொடர்பான பொறுப்பானது, நிருவகிக்கும் தரப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டமூலத்தின் 16(1) வாசகத்தின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்திலான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு, நிறுவகத்தின் சகல வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி உரியவாறு புத்தகங்களையும் அறிக்கைகளையும் பராமரித்துச் செல்ல வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களைக்களின் கணக்காய்வு தொடர்பாகக் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அளவுரீதியான பிழையான வெளிப்பாடுகளின்றியது என நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயத்தை உறுதிப்படுத்துதலானது உயர் மட்ட உறுதிப்படுத்தலாகிய போதிலும், இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வினை மேற்கொள்ளும் போது எப்போதும் அளவுரீதியான தவறான அறிக்கையிடலைக் கண்டுபிடிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்த முடியாது. மோசடி அல்லது தவறினது தனிப்பட்ட அல்லது ஒட்டுமொத்த செல்வாக்குக் காரணமாக, அளவுரீதியான தவறான அறிக்கையிடல் ஏற்படக் கூடியதுடன், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதாரரீதியான தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் நடுநிலையானதாகவும் துல்லியமாகவும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக, நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய அளவுரீதியான பிழையான அறிக்கையிடலின் அபாயத்தை அடையாளங் காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கேற்ப, பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளைத் தயாரிப்பதனூடாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்பதற்குப் போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். அளவுரீதியாக பிழையான அறிக்கையிடலின் தாக்கத்தை விட, மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் தீவிரமாகவிருப்பதுடன், கூட்டுச்சதி, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினைக் கைவிடல் போன்றவை காரணமாக மோசடி ஏற்படுகின்றது.

- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளைத் தயாரிப்பதற்காக நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வொன்று பெறப்பட்ட போதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டினை வினைத்திறன் பற்றிய கருத்தொன்றை வெளியிட உத்தேசிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு முன்மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களின் பொருத்தப்பாடு மதிப்பிடப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக நிறுவகத்தின் இடையறாத நிலைத்திருத்தல் தொடர்பாக போதியளவிலான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாகப் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளினடிப்படையில், கணக்கீட்டினை மேற்கொள்வதற்கு நிறுவனமானது இடையறாது நிலைத்திருத்தல் தொடர்பான அடிப்படையினைப் பிரயோகிப்பதற்கான பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான்

முடிவுக்கு வருவதாயின், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்பாடுகளுக்கு எனது கணக்காவு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுவதுடன் அவ்வெளிப்பாடுகள் போதியளவினதாக இல்லாவிட்டால், எனது அபிப்பிராயப்படி கணக்காய்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், தொடர்ந்து நிலைத்திருப்பதானது எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளினால் முடிவுறுத்தப்படலாம்.

- வெளிப்பாடுகளை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்இ வியூ+கம் மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீட்டிற்குட்படுத்தியதுடன் அதற்குக் காரணமான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வினுள், அடையாளங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கஇ தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்,

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின்படி, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதுடன், எனது பரிசீலனையில் விளங்கும் விதத்தில் உரிய நிதி அறிக்கைகளை நிறுவகமானது பராமரித்து வந்துள்ளது.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளினடிப்படையில், போதியளவிலான விடயங்களுக்கு வரையறுக்கப்படுவதினுள் பின்வரும் வெளிப்படுத்தலை மேற்கொள்ளக் கூடிய எதுவும் எனது அவதானிப்புக்குட்படவில்லை:

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கஇ தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் நிருவாகச் சபையின் உறுப்பினரொருவருக்கு நிறுவகம் தொடர்பான குறித்ததொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது வேறுவிதமாக சாதாரண வியாபார நிலைமைகளுக்குப் புறம்பாகத் தொடர்பொன்றுள்ளது என வெளிப்படுத்துதல்:

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், குறித்ததொரு எழுத்துமூலமான சட்டமொன்றுக்கு அல்லது நிறுவகத்தின் நிருவாகச் சபையினால் வெளியிடப்பட்ட வேறேதேனும் பொது அல்லது விசேட கட்டளைகளுடன் இணங்காது செயற்பட்டுள்ளது என வெளிப்படுத்துதல்:

விதிமுறைகள், பிரமாணங்களுக்கான மேற்கோள்	விபரம்
(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி	நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளபோதிலும் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையின் 756 ஆம் இலக்க நிதி ஒழுங்குவிதி	நிதிக் கூற்றுக்களின்படி ரூபா. 6,334,208 பெறுமதியான சொத்துக்கள் தொடர்பில் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இருப்பு சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(இ) 2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கை	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 4 நடாத்தப்படவிருந்த போதிலும் நிறுவகத்திற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுடன் இணங்கியவாறு நிறுவகம் செயற்படவில்லை என வெளிப்படுத்துதல்:

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கஇ தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் பயனுள்ள விதத்திலும் உரிய காலவெல்லையினுள் குறித்த சட்டதிட்டங்களுக்கமைவாக, கொள்வனவு செய்து பயன்படுத்தப்படவில்லை என வெளிப்படுத்துதல்.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) மீளாய்வாண்டினுள் உயர்கல்வி அமைச்சிடமிருந்து கிடைத்த ரூபா. 7,000,000 மூலதன ஒதுக்கம் மற்றும் திறைசேரியிலிருந்து மூலதனச் செலவிற்காகக் கிடைத்த ரூபா. 6,100,000 இல் செலவிடப்படாத ரூபா. 3,000,000 பெறுமதியான மொத்தம் ரூபா. 10,000,000 நிதியானது முகாமைத்துவ சேமிப்புக் கணக்கொன்றினுள் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க விதிமுறைகளின் கீழ் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகமானது 2017 டிசம்பர் 06 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு நிறுவப்பட்டிருந்த போதிலும் 2020 யூலை 15 ஆம் திகதி வரை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முகாமைத்துவக் குழு மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் செனட் சபையின் அனுமதியுடன் அனைத்து பட்டப்பின்படிப்பு (MD) பாடத்திட்டங்களுக்குமாக நியமிக்கப்பட்டிருந்த கல்விச் சபை (Board of Study) 03 இல் (ஆயுர்வேதம், யூனானி மற்றும் சித்த ஆயுர்வேதம்) பாடத்துறை 11 இற்குரிய பாடத்திங்களுக்காக முகாமைத்துவக் குழுவானது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் செனட் சபை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற வேண்டிய போதிலும் 2020 ஆகஸ்ட் 21 ஆம் திகதியாகும் போது அவற்றுள் 2 பாடத்துறைகளுக்கு மட்டுமே முழுமையான அனுமதி பெறப்பட்டுள்ளது.

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகமானது 2017 திசம்பர் 06 ஆம் திகதி முதல் நிறுவப்பட்டதன் பின்னர் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் 2016/2017 பட்டப்பின் படிப்பு MD(AYU) பாடநெறிக்காக அனுமதிக்கப்பட்டு 2 வருடங்கள் கோட்பாடு சார்ந்த பயிற்சியை முடித்திருந்த மாணவர்கள் 31 பேரை சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு உள்ளீர்க்க முடியாமற் போனது.

(உ) 2018 செப்டம்பர் 26 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பணியாள்தொகுதி பதவிகள் 7 இற்குரிய அலுவலர் 16 பேராவதுடன் 2020 யூன் 23 ஆம் திகதியாகும் போது 14 அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் நிலவின. அதுபோன்றே, அங்கீகரிக்கப்பட்ட பணியாள் தொகுதியினுள் உள்ளடங்கும் பணிப்பாளர் பதவி, முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 3 மற்றும் அலுவலக உதவியாளர் பதவி 1 இற்காக நிரந்தர அடிப்படையில்

ஆட்சேர்ப்பு செய்யப்படாது மீளாய்வாண்டில் ஒப்பந்த அடிப்படையில் பணியாள் தொகுதி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 2030 “நிகழ்ச்சி நிரல்” தொடர்பில் நிறுவகமானது அறிந்திருந்த போதிலும் நிறுவனத்துடன் பொருந்தக்கூடிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் குறிக்கோள்களும் மற்றும் அவ்விலக்குகளை அடைய அணுக வேண்டிய முக்கிய இடங்கள் மற்றும் இலக்குகளை அடைவதனை அளவிடக் கூடிய குறிகாட்டிகளை அடையாளங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்
டப்ளியூ. பீ. சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமையதிபதி

7. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்

எனது இலக்கம் :- PGIIM/Audit/2019/02
உமது இலக்கம் :- ஈடீயூ /பீ /பீஜீஜஐஎம்/எஃப்ஏ /2019

2021 பெப்ரவரி 24

கணக்காய்வாளர் நாயகம்
தேசிய கணக்காய்வு அலுவலகம்
இல. 306/72
பொல்தூவ வீதி
பத்தரமுல்லை.

ஐயா ,

சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் வாசகத்தின் படியிலான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

மேற்படி விடயம் தொடர்பாகத் தங்களால் அனுப்பப்பட்ட 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் வாசகத்தின் படியிலான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்குரிய விளக்கம் கீழே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

2.1 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

விதிமுறைகள்/ பிரமாணங்களுக்கான மேற்கோள்	விபரம்

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பொதுத்தொழில் முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி	2019 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு மொழிபெயர்ப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளது.
(ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையின் 756 ஆம் இலக்க நிதி ஒழுங்குவிதி	2019 ஆம் ஆண்டும் உள்ளடங்குமாறு 2020 ஆம் ஆண்டின் பொருள் கணக்கெடுப்பினை மேற்கொண்டு குறித்த அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.
(இ) 2009 யூன் 09 தேதியிட்ட டி.எம்.ஏ / 2009 (01) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்கச் சுற்றறிக்கை	2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வுக் குழு நிறுவப்பட்டிருக்காததுடன் 2020.01.29 ஆம் திகதி முதல் உரியவாறு கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) இந்தக் கணக்காய்வு விசாரணையானது 2020 செப்டம்பரில் நடைபெற்ற நிதிக் குழு பரிந்துரைக்கும் பின்னர் நடைபெற்ற நிர்வாகக் குழு ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டது. அந்த பரிந்துரைகள் மற்றும் ஒப்புதல்களைத் தொடர்ந்து, மோட்டார் வாகனத்திற்காக ஒதுக்கப்பட்ட 7 மில்லியன் ரூபாவினை மோட்டார் வாகனம் வாங்கும் வரை நிதிய முகாமைத்துவக் கணக்கில் பராமரிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டது. மோட்டார் வாகனம் வாங்கும் பணியை விரைவுபடுத்த அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. நிதி நிதிய முகாமைத்துவக் கணக்கில் வைப்புச்செய்யப்பட்ட நிலுவைத் தொகையின் ஒரு பகுதி (அதாவது 2019 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மூலதனக் கணக்கில் நிலுவை) ஏற்கனவே மூலதனத்தில் செலுத்தப்பட்டுள்ளது, அதே கணக்கில் நிலுவைத் தொகையை தொடர்ந்தும் பராமரிக்கவும், தொடர்புடைய காசோலைகளை காசாக்கவும் முடிவு செய்யப்பட்டது.

(ஆ) இந்த திட்டம் 2018 சனவரியில் தொடங்க திட்டமிடப்பட்டிருந்தாலும், நிறுவனம் 2019 பெப்ரவரி மாதத்தில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நிறுவன பணிப்பாளர் மற்றும் 2019 மார்ச் மாதத்தில் சிரேஷ்ட உதவிப் பொருளாளரையும் நியமித்ததிலிருந்தே செயல்பட்டு வருகிறது. முகாமைத்துவக் குழுவின் முதல் கூட்டம் 2019 பெப்ரவரி 26 ஆம் திகதி நடைபெறும். கல்விச் சபைகளை நியமித்தல், வங்கி கணக்குகளைத் திறத்தல் மற்றும் கல்வி நிர்வாகம் மற்றும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி நடவடிக்கைகள் மற்றும் 2019 மார்ச் முதல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி நடவடிக்கைகள், பாடத்திட்டங்கள் தயாரித்தல், பாடத்திட்ட ஒப்புதல்கள் சமர்ப்பித்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டு 2020 ஏப்ரல் 30 முதல் பின்வரும் பாடநெறிகளைத் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும், நாட்டில்

நிலவிய கொவிட் - 19 நிலைமை காரணமாக அனைத்து பல்கலைக்கழகங்களும் சுமார் 2 மாதங்கள் மூடப்பட்டிந்தமை மற்றும் மே 11 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட முன்னாள் பணிப்பாளரின் பதவிக் காலம் முடிவடைந்திருந்தமையால், 2020 ஜூன் 23 ஆம் திகதியன்று ஒரு புதிய பதில் பணிப்பாளரை மீண்டும் நியமித்தமை காரணமாக கல்வி நடவடிக்கைகள் தொடங்குவது தாமதமானது. தற்போது, ஆயுர்வேதத்தில் முதுகலை படிப்புகள் 2020 ஆகஸ்ட் 17 முதல் தொடங்கப்பட்டுள்ளன.

(இ) தற்போது 05 ஆயுர்வேத படிப்புகளுக்கும் மேலும் ஒரு பாடநெறிக்காகவும் (யூனானி) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேலும் இரண்டு படிப்புகளுக்கான ஒப்புதலுக்காக தொடர்புடைய விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 04 படிப்புகளுக்கான விண்ணப்பங்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சென‌ட் மற்றும் நிர்வாக சபை ஒப்புதல் அளித்துள்ளன. அதற்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படவுள்ளன.

(ஈ) நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட 31 மாணவர்களுக்கு கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல்கள் மூலம் படிப்புகள் தொடங்கப்படும் என்றும், அதற்கான கட்டணம் செலுத்தப்படும் என்றும், அதன்படி 24 மாணவர்கள் பாடநெறிக்கு பதிவு செய்திருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. இவர்களில், நேர்முகப் பரீட்சை சபையானது சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவனத்தைச் சேர்ந்த 5 மாணவர்களை அவர்கள் மேற்கொண்ட கல்வி நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு 6 மாதங்கள் மற்றும் ஒரு வருடம் அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக விடுவித்துள்ளது. அதன்படி, 19 மாணவர்கள் ஆகஸ்ட் 17, 2020 அன்று தங்கள் படிப்புகளைத் தொடங்கினர், தற்போது 17.02.2021 முதல் 21 மாணவர்கள் ஐந்து பாடநெறிகளின் கீழ் தங்கள் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்கின்றனர்.

(உ) தற்போது 9 பணியாளர்கள் வெற்றிடங்கள் மட்டுமே உள்ளன, உதவி நூலகர், தொழில்நுட்ப அலுவலர் மற்றும் மேலாண்மை உதவியாளர் (புத்தகக் காப்பாளர்) பதவிகளை நிரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசு அளித்த அறிவுறுத்தல்களின்படி, ஆரம்ப தரங்களில் உள்ள வெற்றிடங்கள் அரசாங்கத்தின் தொழிலாளர் படையின் கீழ் நிரப்பப்படும் என்றும், முதன்மை தரங்களுக்கு 05 பதவிகளை நிரப்ப முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிரந்தர வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம், ஒப்பந்த அடிப்படையில் இருந்த அதிகாரிகளை பணியமர்த்துவதை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஊ) நிறுவனத்தின் பெருநிறுவன திட்டத்தை வகுப்பதில் இந்த குறிகாட்டிகளை அடையாள காண நடவடிக்கை எடுக்கப்படும்.

பணிப்பாளர்
சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம்

- சிங்களப் பிரதியின் கையெழுத்துக் குறிப்புகள் கர ஏ

8. கணக்காய்வுக் குழுவின் அவதானிப்பு

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்கம்

முகாமைத்துவக் குழுவுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய உப குழுவாக நிறுவப்பட்டுள்ள சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் கணக்காய்வுக் குழுவானது நிறைவேற்று அல்லாத முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் மூவரை உள்ளடக்கியதாகும். மீளாய்வாண்டில் பின்வரும் உறுப்பினர்கள் கணக்காய்வுக் குழுவின் பணிகளில் ஈடுபட்டனர்.

உறுப்பினர்கள் 2021 ஆம் ஆண்டில் குழுவில் பங்குபற்றுதல்

(பங்குபற்றியமை √ / பங்குபற்றாமை x)

1. திரு. டீ. என். ஒசன் - தலைவர் √
2. திரு. டீ. தர்மராஜா - குழு உறுப்பினர் √
3. திரு. மகிந்த மடிஹஹேவா - குழு உறுப்பினர் x

மேற்படி உறுப்பினர்களுக்கு மேலதிகமாக இந்நிறுவனத்தில் வெளிவாரிக் கணக்காய்விற்குப் பொறுப்பான தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அலுவலர் திருமதி ஐ. டீ. ஐ பிரியதர்ஷனீ 2020.01.29 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழுவிற்கு கண்காணிப்பு மட்டத்தில் பங்குபற்றினார்.

கூட்டத்தை நடாத்துதல்

பொது வியாபார முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீ.ஈ.டீ / 31 இன் படி, இந்த குழு ஆண்டுக்கு நான்கு முறையாவது கூட வேண்டும் . இந்த நிறுவனத்தின் முதல் கணக்காய்வுக் குழு கூட்டம் 2021.01.29 ஆம் திகதி நடைபெற்றது. உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வு அறிக்கைகள் கலந்துரையாடப்பட்டன. இந்த நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இல்லாததால், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளராகிய திரு. கே.ஈ.டபிள்யூ. ஜயசிறி கூட்டத்தைக் கூட்டுபவராகச் செயல்பட்டார்.

அடிப்படைப் பொறுப்புக்கள்

நிறுவனத்தின் நிதி மற்றும் தொடர்புடைய முகாமைத்துவ நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்த முகாமைத்துவ சபைக்கு உதவுவதே கணக்காய்வுக் குழுவின் முக்கிய நோக்கமாகும்.

அடிப்படைப் பொறுப்புகளாவன,

1.நிதிக் கூற்றுக்கள், நிதி அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வுச் செயல்முறை ஆகியவற்றின் தொடர்ச்சியை மதிப்பாய்வு செய்து கண்காணித்தல்.

2. நிறுவனத்தின் நிதி மற்றும் அது தொடர்பான எந்தவொரு விடயத்தையும் பரிசீலனை செய்தல்.

3. ஆண்டறிக்கை மற்றும் உள்ளகத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளைக் கண்காணித்தல்.

4. உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் நிகழ்ச்சிகளைக் கண்காணித்தல்.

5. வெளியக மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை ஆராய்ந்து பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

6. உள்ளக நிருவாகக் கட்டமைப்புக்களின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டை மீளாய்வு செய்தலும் மேற்பார்வை செய்தலும்.

மீளாய்வாண்டினுள் செயற்பாடுகள்

2021.01.29 ஆம் திகதி நடைபெற்ற கூ ட்டத்தினுள் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

1 . சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு

வெளியக மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின்படி சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கமாக செயற்படுதல் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டது. நிறுவகத்தின் வருடாந்த கணக்கறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அதுபோன்றே, நிறுவனத்திற்குரிய கூட்டுத் திட்டம், செயற்பாட்டுத் திட்டம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான தேவையும் கலந்துரையாடப்பட்டது.

2. உள்ளக நிருவாகக் கட்டமைப்பினை மீளாய்வு செய்தலும் வலுப்படுத்தலும்

நிலையான சொத்தினை நிருவகித்தல், வருடாந்த சரக்கிருப்பினை கணக்கெடுப்புகள் / நிலையான சொத்து கணக்கெடுப்புகள், கடமை பட்டியல்களை வழங்குதல் மற்றும் ஆட்சேர்ப்பு ஆகியவற்றின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை வலுப்படுத்த பரிந்துரைகள் செய்யப்பட்டன. மேலும், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு வினவல்களில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் மீளாய்வு செய்யப்பட்டது.

டீ. என். ஒசன்
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்
பொது முயற்சிகள் திணைக்களம்
நிதி அமைச்ச

- சிங்களப் பிரதியின் கையெழுத்துக் குறிப்புகள் கர ஏ

நிலைபேறான அபிவிருத்திக்கான முன்மொழிவு

1. சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது)PGIIM) 2019 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதுடன் சுகாதார சேவைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறைகளுக்கான மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. சுகாதார பிரமாணக் குறிப்புகளினடிப்படையில் சுதேச மருத்துவ அமைச்சின் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யூனானி ஆகிய முக்கிய சிறப்புத் துறைகளுக்கு தேவையான அனைத்து நிபுணர்களையும் சுகாதார மற்றும் சுகாதார மற்றும் சுதேச மருத்துவம் மற்றும் உயர் கல்வி அமைச்சின் ஆயுர்வேதம், யூனானி மற்றும் சித்த மருத்துவத் துறைக் கல்வி நிறுவனங்களுக்குரிய கல்வி நிபுணர்களுக்கு வழங்குவது சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின்)PGIIM) பொறுப்பாகும். கல்வி அதன்படி, சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது)PGIIM) நாட்டின் மனித வலுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பயிற்சித் திட்டங்களைத் தொடங்க உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த இலக்கை அடைய, சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின்)PGIIM) கல்வி நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. உள்நாட்டு மருத்துவத் துறைகளில் முதுகலைமாணி (MD) திட்டங்களை வழங்குவதன் மூலம், சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது)PGIIM**) எல்லா வயதினரதும் ஆரோக்கியமான வாழ்வை உறுதிசெய்யவும், நல்வாழ்வை மேம்படுத்தவும் உதவுகிறது.**

2. இலங்கையின் சுதேச மருத்துவத் துறைக்கு தகுதி வாய்ந்த முதுகலைமாணிப் பட்டங்களை வைத்திருப்பவர்களை உருவாக்க நிறுவனம் அனைத்து முயற்சிகளையும் செய்கிறது. நிறுவகமானது, தர உறுதிப்படுத்தல் நிகழ்ச்சிகளினூடாக மருத்துவ முதுகலைமாணிப் பயிலுநர்களுக்கு உயர் தரம் வாய்ந்த கல்வி வாய்ப்பினை வழங்கும் நோக்கில் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்திற்கு)PGIIM**)** தர உறுதிப்படுத்தல் மத்திய நிலையமொன்றை நிறுவுவதற்குத் திட்டமிட்டு வருகின்றது. இதன் மூலம் நிறுவனம் **தரமான கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கும் உதவுகிறது.**

3. நிறுவனம் எப்போதும் **பாலின சமத்துவம் மற்றும் சமத்துவத்தை** பராமரிக்க நடவடிக்கை எடுக்கிறது.

4. சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது)PGIIM**)** சமீபத்தில் நிறுவப்பட்ட நிறுவனமாக இருப்பதால், **அனைவருக்கும் நீர் மற்றும் சுகாதாரம் கிடைப்பது மற்றும் நிலையான முகாமைத்துவத்தை உறுதி செய்யும் பணியில்** உள்ளது. அதற்கான முன்முயற்சியாக, நிறுவனம் தனித்தனியாக குப்பைகளை சேகரித்து சிதைக்கக்கூடிய பொருட்களான கண்ணாடி, பொலித்தீன் / பிளாஸ்டிக் மற்றும் காகிதங்களை சேகரித்து, உரிய முறையில் அகற்றியது.

5. இலங்கையில் உள்ள சுதேச மருத்துவத் துறையின் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யூனானி துறைகளுக்கு இந்த நிறுவனம் மருத்துவ முதுகலைமாணி (MD) திட்டங்களை

வழங்கியது. இந்த மருத்துவ முதுகலைமாணி (MD) திட்டங்களுக்கு, வெவ்வேறு தேசங்களைச் சேர்ந்த பயிற்சியாளர்கள். தற்போது, மருத்துவ முதுகலைமாணி (MD) திட்டத்தில் ஆயுர்வேத திட்டங்கள் மட்டுமே தொடங்கப்பட்டுள்ளன மற்றும் எதிர்காலத்தில் மருத்துவ முதுகலைமாணி (MD) யூனானி திட்டங்களின் முதல் தொகுதி மாணவர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்காலத்தில் மருத்துவ முதுகலைமாணி (MD) சித்த மருத்துவத் திட்டங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பல்வேறு இனங்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்த பயிற்சியாளர்களிடையே பரஸ்பர நம்பிக்கையை வளர்க்க சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது)PGIIM**)** அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

6. சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம்)PGIIM**)** வழங்கும் அனைத்து மருத்துவ முதுகலைமாணி (MD) பட்டப்படிப்புகளும் மருத்துவ முதுகலைமாணிக்குப் (MD) பிந்தைய திட்டத்தின் இறுதி ஆண்டில் ஒரு வருட வெளிநாட்டுப் பயிற்சியைக் கொண்டுள்ளது. பிற நாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம்)PGIIM**)** திட்டமிட்டுள்ளது (மருத்துவ முதுகலைமாணி (MD) புலமைப் பரிசில் பெறுவோருக்கு இறுதி ஆண்டு பயிற்சியை வழங்குவதற்கான இந்தியாவில். இந்த செயல்முறையின் மூலம், சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம்)PGIIM**)** மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச உறவுகளை வளர்க்க இடமளிக்கின்றது.)